# ஒப்பந்தங்கள்

**முதல் முறையாக சர்வதேச திட்ட உடன்பாட்டில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகம் கையெழுத்து**

- மியான்மர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா வணிகம் , வர்த்தகம், சுகாதாரம், கல்வி, சுற்றுலா ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் வாகனப் போக்குவரத்து தங்கு தடையின்றி இயங்குவதற்கா க மியான்மர் நாட்டில் உள்ள யாக்யி - கலேவா நெடுஞ்சாலையை மேம்படுத்துவதற்கான உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

**மேகாலயா மக்கள் சமூகம் தலைமையேற்கும் நில நிர்வாகத் திட்டம்**

- மேகாலயா மக்கள் சமூகம் தலைமையேற்கும் நில நிர்வாகத் திட்டத்திற்கு " 48 மில்லியன் அமெரிக்க டாலர் ஐ .பி.ஆர்.டி (IBRD) கடன் ஒப்பந்தத்தில் உலக வங்கியுடன் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

**இந்தியா ஈரான்இடையேபுரிந்துணர்வுஉடன்பாட்டைமேற்கொள்ளமத்தியஅமைச்சரவைஒப்புதல்**

- பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், வர்த்தக தீர்வு நடவடிக்கைகளுக்காக வல்லுநர் குழுவை அமைக்கும் வகையில், இந்தியா மற்றும் ஈரான் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு செயல்பாட்டுக்கு பிந்தைய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**இந்தியா மற்றும் கனடா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- பிரதமர்திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இந்தியா மற்றும் கனடா இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஆராய்ச்சியை செம்மைப்படுத்துதல் மற்றும் தொழில்துறை - கல்வித்துறையில் இந்தியா மற்றும் கனடா இடையே கூட்டு முயற்சிகளில் பங்கேற்புகளை ஊக்குவித்துவளர்ப்பதில் ஒரு முகப்படுத்திய கவனத்தை செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இருநாடுகளிலும் புதுமை சிந்தனைகளை அதிகரிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் உள்ளது.

**மனித உரிமைகள் பாதுகாப்பு திருத்த மசோதா 2018-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- நாட்டில் மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு ஆகியவற்றுக்காக மனித உரிமைகள் பாதுகாப்புதிருத்த மசோதா 2018க்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்தது.

**இந்தியாவிற்கும், இங்கிலாந்து மற்றும் வட அயர்லாந்து நாடுகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- சட்ட விரோதமாகக் குடியேறியவர்களைத் திருப்பி அனுப்புவதற்காக, இந்தியாவிற்கும், இங்கிலாந்து மற்றும் வடஅயர்லாந்து இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**இந்தியா மற்றும் சர்வதேசச் சூரியச்சக்திக் கூட்டமைப்பு இடையே தலைமையிட (ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- இந்தியாவுக்கும் சர்வதேசச் சூரியச்சக்திக் கூட்டமைப்புக்கும் இடையே கையெழுத்தான, நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் நாடு தொடர்பான தலைமையிட ஒப்பந்தத்திற்குப் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**இந்தியாவுக்கும் சவோடோமி மற்றும் பிரின்சிபி நாட்டுக்கு இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைகளில் இந்தியாவுக்கும் மற்றும் சவோடோமி மற்றும் பிரின்சிபி நாட்டுக்கும் இடையே ஏற்கெனவே கையெழுத்திடப்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்குப் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்கு இரும்புத்தாது வழங்குவதற்கான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், உலோகங்கள் மற்றும் தாதுக்கள் வர்த்தகக் கழகம் மூலம், நீண்டகால அடிப்படையில், ஜப்பானீஸ் ஸ்டீல்மில்ஸ் மற்றும் தென்கொரியாவின் போஸ் கோநிறுவனங்களுக்கு 64% இரும்புத்தன்மை கொண்ட இரும்புத்தாதுவை மேலும் 5 ஆண்டுகளுக்கு (1.4.2018 முதல் 31.3.2023 வரை) வழங்குவதற்கான ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 5 -வது பட்டியலின் கீழ் ராஜஸ் தானில் பட்டியலிடப்பட்ட பகுதிகளை அறிவிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

- 1981 பிப்ரவரி 12 ஆம் தேதியிட்ட அரசியலமைப்பு உத்தரவு (சி.ஓ) 114 ஐ ரத்து செய்து புதிய அரசியலமைப்பு உத்தரவைப் பிறப்பிப்பதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 5 -வது பட்டியலின் கீழ் ராஜஸ்தானில் பட்டியலிடப்பட்டப் பகுதிகளை அறிவிக்கப்பிரதமர் திரு. நரேந்திரமோடி தலமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**இந்தியா - ஜாம்பியா இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின**

- அரசு முறைப் பயணமாக ஜாம்பியா நாட்டுக்கு சென்றுள்ள ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் முன்னிலையில் இந்தியா - ஜாம்பியா இடையே இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு உள்ளிட்ட 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

**எங்களது Whatsapp Group**

**தமிழ் - [கிளிக் செய்யவும்]  English - [கிளிக் செய்யவும்]**

**எங்களது Facebook பக்கம்**

**தமிழ் – Examsdaily Tamil   English - Examsdaily**